சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.103/2024</u>

03.02.2026

வா.சா.1 திரு.அழகுசுந்தரநாதன், த/பெ. கோவிந்தசாமி

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது தகப்பனார் பெயர் கோவிந்தசாமி. நான் தற்போது கூடூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது ஆதார், குடும்ப அட்டை கூடூர் கிராம முகவரியில் தான் உள்ளது. எனது தகப்பனார் காலத்திலேயே நான் கூடூர் கிராமத்திற்கு வந்துவிட்டேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் 1997 ல் இறந்துவிட்டாரா என்றால் சரியாக தெரியவில்லை. தாவா சொத்தை எனது தகப்பனார் காலத்திலேயே கிரயம் வாங்கினேனா என்றால் ஆமாம். தாவா சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 1 சென்ட் ஆகும். தாவா சொத்தை 1 ஆம் பிரதிவாதி சாகுபடி செய்துவருகிறாரா என்றால் இல்லை. தாவா சொத்தை 2015 ஆம் வருடம் நான் வெளியூரில் இருந்ததால் 1 ஆம் பிரதிவாதியை சொத்தை பார்த்துக்கொள்ளுமாறு சொல்லியிருந்தேன். பின்னர் 2018 ஆம் வருடம் தாவா சொத்தை 1 ஆம் பிரதிவாதி விற்பனை செய்துவிட்டதாக ஊரில் பேசியதால் நான் கொடுத்த அனுமதியை ரத்து செய்துவிட்டு நான் கொடுத்த சொத்தை திரும்ப வாங்கிக்கொண்டேன். தாவா சொத்து என் அனுபவத்தில்தான் உள்ளது. தாவா சொத்தை நான் அனுபவம் செய்வதை இடையூறு செய்யக்கூடாது என தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து ஆதியிலிருந்து 1 ஆம் பிரதிவாதியிடம் வாய்மொழி குத்தகை அடிப்படையில் அனுபவம் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி விவசாயம் செய்துவருகிறார் என்றால் சரிதான். நான் மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலங்களில் மனு எழுதிக்கொடுக்கும் வேலை செய்துவருகிறேன் என்றால் சரிதான். அதன் மூலம் எனக்கு நல்ல வருமானம் வருகிறது என்றால் இல்லை. தாவா சொத்தில் நான் பயிர் செய்தேன் என்பதை காட்ட விவசாய சம்பந்தமான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை, கிஸ்தி மட்டும் உள்ளது. கிஸ்தி ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 15 வருடங்களுக்கு மேலாக டெல்டா பகுதியில் கிஸ்தி வசூல் செய்யும் முறையே விடுபட்டுவிட்டது என்றால் சரியல்ல, என்னிடம் உள்ளது. தாவா நிலங்களை பொறுத்து 1 ஆம் பிரதிவாதி சாகுபடி செய்த வகையில் விவசாய கடன் வாங்கியுள்ளார் என்றால் எனது அனுமதி இல்லாமல் வாங்கியுள்ளார். தாவா சொத்தில் 10 குழி நிலத்தில் 1 ஆம் பிரதிவாதி வீடு கட்டி அனுபவம் செய்ய அனுமதி வழங்கினேன். நான் சொல்லும் போது வீட்டை காலி செய்வதாக சொன்னார். வாய்மொழியாக வீடு கட்ட அனுமதி கொடுத்தேனா என்றால் ஆமாம். 1 ஆம் பிரதிவாதி

தற்போதும் அந்த சொத்தில்தான் குடியிருந்துவருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தில் 1 ஆம் பிரதிவாதி விவசாயி என்ற முறையில் வீடு கட்டி குடியிருந்து வருவதால் சட்டப்படி தாவா சொத்து பிரதிவாதிக்கு சட்டத்தின் பலன் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. தாவா சொத்து இன்றுவரை 1 ஆம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல, தரிசாக உள்ளது. தாவா படி எனக்கு பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவதி நம்பிக்கையின் அடிப்படையில் குத்தகை கொடுத்ததற்கு ரசீது வாங்காததாலேயே அதனை பயன்படுத்தி தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராதில் பிரதிவாதி சொத்தை விற்பனை செய்துவிட்டதாக ஊரில் சொன்னதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் வாங்கியது முதலே 1 ஆம் பிரதிவாதி குத்தகைதாராக இருந்து வருவதால் 1 ஆம் பிரதிவாதிக்கு குத்தகை உரிமை உள்ளது என்றால் சரியல்ல. எனது சகோதரர்கள் பழனிவேல், துரை, பாலதண்டபாணி மற்றும் எனக்கும் இடையே சுமூகமான உறவு இல்லை என்றால் சரியல்ல, துரைக்கும் எனக்கும் பிரச்னை எதுவும் இல்லை. பழனிவேல், பாலதண்டாயுதபாணியுடன் பேச்சுவாரத்தை உண்டா என்றால் இல்லை. பழனிவேல் மீது துரை அ.வ.எண்.16/2023 என்ற எண்ணில் திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் துரைக்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல. பாலதண்டாயுதபாணியும், பழனியும் ஒன்றாக உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.108/2024 என்ற எண்ணில் பாகபிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது சகோதர, சகோதரிகளும் வாரிசுகளாக உள்ளார்கள் என்றால் சரிதான். பாலதண்டாயுதபாணி 9 ஆம் வகுப்பு படித்துள்ளார். பாலதண்டாயுதபாணி வெளி பழக்கம் இல்லாதவர் என்றாலும் அவரை தொந்தரவு செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவாபடி எனக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.